1973 டிசம்பர் 4]

நாடார் புதுக்குளத்திற்கு நீர் வழங்கல்.

*611 வினு—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு நீர்த்தேக்கத்திலிருந்து மெயின் கால்வாய் மார்க்கமாக நாடார் புதுக்குளத்திற்கு தண்ணீர் விட வேண்டிய அவசியம் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு 7—3—1973 தேதியிட்டு மனு ஏதேனும் அனுப்பப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) "நாடார் புதுக்குளம்" ஏரி, அக்கரையுள்ள சில உழவர்களினுல் சுமார் 14 ஆண்டுகட்கு முன் அவர்களது பட்டா நிலங்களுக்குள்ளாகவே அமைத்துக் கொள்ளப்பட்ட ஒரு தனியார் ஏரியாகும். மணிமுத்தாறு நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழ் முறையாகச் சேர்க்கப்பட்ட 313 ஏரிகளில் இது அடங்கவில்லே. மணிமுத்தாறு தலேக்கால்வாய் மூலமாக இத்திட்டத்தின் கீழ் தற்போதுள்ள ஏரிகளுக்கே போதிய நீர் வழங்குவது மிகவும் கடினமாக இருப்பதால் கூடுதலான ஏரிகளுக்கு நீர் வழங்க முடியாது. எனவே, "நாடார் புதுக்குளம்" ஏரியை மணிமுத்தார் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் சேர்த்துக்கொள்வதற்கில்லே.

பேசின்பிரிட்ஜ் மேம்பால வேலே.

*612 வினு—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

பேசின்பிரிட்ஜ் மேம்பாலம் அமைப்பதில் இன்னும் முற்றுப் பெருத வேலேகள் எப்பொழுது நிறைவுபெறும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேசின் பிரிட்ஜ் மேம்பாலத்தில் வேலேகளனேத்தும் முடிவடைந்துவிட்டன.

திரு. கா. வேழவேந்தன்: மிகப் பெரிய போக்குவரத்தைக் கொண்டிருக்கும் பேசின் பிரிட்ஜ் மேம்பாலத்தின் ஓரத்தில் கட்டப்பட வேண்டிய கைப்பிடிச்சுவர் கட்டப்படாமல் இருக்கிறது.